(ஆ) செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் திறந்து விடுவதால் விவசாயம் பாதிக்கப் படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன் : செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து ென்னைக்கு தண்ணீர் திறந்து விடுவதால் அந்தப் பகுதி விவசாயம் பாதிக்கப்படுவது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு செய்தியை எனக்குக் கொடுத்திருக்கிறார். அந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். போளூர் வரதன் (குறுக்கீடுகள்). போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்). போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் (குறுக்கீடுகள்) போளூர் வரதன் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்) போளூர் வரதன். (குறுக்கீடுகள்) மற்றவர்களுக்கு அனுமதி இல்லை. அனுமதி இல்லை என்று சொன்னதற்குப் பிறகு உட்கார வேண்டும். அனுமதி இல்லை (குறுக்கீடுகள்).

4. கவன ஈர்ப்பு.

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு, திரு. ச. காந்திராஜன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டியது குறித்து '' மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS